<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 411/2020 நாள்: 02.03.2026 வா.சா.1– ராமராஜ்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

நான் தாவா தொகையை வட்டியுடன் திரும்ப கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 123, ACS Complex, மங்களம் ரோடு, கருவம்பாளையம், திருப்பூர் என்ற முகவரியில் தற்போது வசித்து வருகிறேன். எனக்கு உடுமலைபேட்டை தாலுகாவில் விவசாய பூமிகள் உள்ளன. தாவா சொத்து எலையமுத்தூர் கிராமத்தில் உள்ளது, அதனுடைய சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு 18 ஏக்கர் 86 ¼ செண்ட் விஸ்தீரணம் உள்ள நிலமுள்ளது. மேற்படி சொத்தை பொறுத்து எனது மனைவி தான் பிரதிவாதியுடன் முதலில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரிதான். 28.07.2016 அன்று முதல் கிரைய ஒப்பந்தம் எனது மனைவி ஏற்படுத்தினார். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ.12,75,000 என்று கிரைய விலை நிர்ணயித்து கொண்டோம். மேற்படி முதலாவது கிரைய ஒப்பந்தத்தை எனது மனைவி ஏற்படுத்தும் போது ரொக்கமாக ரூ.10 லட்சமும், வங்கி பரிவர்த்தனை மூலமாக ரூ.30 லட்சமும் பிரதிவாதிக்கு கொடுத்தோம். முதல் கிரைய ஒப்பந்தம் ஒரு வருட காலம் என்று நிர்ணயித்திருந்தோம். எதற்காக ஒரு வருட காலம் மீத தொகைக்கு காலக்கெடு நிர்ணயித்தோம் என்றால் எனக்கு சொந்தமான வேறு ஒரு சொத்தை விற்பனை செய்து தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு ஒரு வருட காலம் காலக்கெடு நிர்ணயித்திருந்தோம். மேற்படி ஒரு வருட காலகெடுவிற்குள் எனக்கு சொந்தமான வேறு ஒரு சொத்தை நான் விற்பனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஒரு வருட காலத்திற்குள் மீத கிரைய தொகையை செலுத்தி கிரையத்தை முடிக்க தயாராக இருக்கிறோம் என்று

அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 12.06.2017 ல் நான் பிரதிவாதியுடன் தாவா சொத்து சம்பந்தமாக ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேன். தாவா சொத்து சம்பந்தமாக எனது மனைவி ஏற்படுத்திகொண்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து புதியதாக இரண்டாவதாக நான் தாவா சொத்து சம்பந்தமாக கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டேன். எனது மனைவியுடன் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் கொடுத்த முன் தொகை போக நான் பிரதிவாதிக்கு இரண்டாவதாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது ரூ.30 லட்சம் வங்கி பரிவர்த்தனை மூலம் செலுத்தினேன். மேற்படி இரண்டாவது கிரைய ஒப்பந்தத்திற்கு ஒரு வருட காலக்கெடு நிர்ணயித்திருந்தோம். எனது மனைவி பிரதிவாதியுடன் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தமும், நான் பிரதிவாதியுடன் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தமும் ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப்படி கிரையத்தை முடிக்க எனது மனைவியோ, நானோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான், மத்தியஸ்தர்கள் மூலமாக பேசினேன், தற்போது வழக்கு போட்டிருப்பதாக சாட்சி கூறுகிறார். தாவா சொத்தின் சுவாதீனத்தை கிரைய ஒப்பந்தத்திற்கு பிறகு என்னிடம் பிரதிவாதி ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தப்படி நான் தாவா சொத்தில் மண் கொட்டி அனுபவித்து கொள்ளலாம் என்று கிரைய ஒப்பந்த ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் சுவாதீனம் ஒப்படைக்கப்படாத சூழ்நிலையிலும், மண் கொட்டி வைக்க அனுமதிக்கப்படாத சூழ்நிலையில் எதற்காக தாவா இடத்தை மண்ணை கொட்டி வைத்தேன் என்றால் சாட்சி பிரதிவாதியின் அனுமதியுடன் தான் மண்ணை கொட்டி வைத்ததாக கூறுகிறார். தாவா சொத்தில் நான் மண்ணை கொட்டி வைத்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் கைவசம் உள்ளது. தாவா சொத்தில் எனக்கு சுவாதீனம் இல்லாத போது நான் மண் கொட்டி வைத்ததாக சொல்வது

பொய் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக கிரைய முன் தொகையை திரும்ப கேட்டு நான் உடுமலைபேட்டை, காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் பிரதிவாதியை விசாரணை செய்தார்கள். நான் கொடுத்த புகார் நகலை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் பிரதிவாதி மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.02 16:00:34 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.